## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## C.C.No.80 /2025

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–03, திரு. சத்தியராஜ் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4 ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சத்தியராஜ் | வயது | : | 40/26 |
| த/பெ/ க.பெ./ | : | ஜெகதீசன் | தொழில் | : | **விவசாய வேலை** |
| ஊர் | : | **அமிர்தராயன் கோட்டை** | நிலை | : | LW 05/PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை:**

நான் அமிர்தராயன் கோட்டையில் வசித்து விவசாய வேலை செய்த வருகிறேன். கடந்த 2024 வருடம் இரவு சுமார் 09.00 மணியளவில் நானும் செல்வராஜும் எங்கள் ஊர் ஏரி அருகில் உள்ள வயல் அருகே நின்று கொண்டிருந்தபோது போலீசார் அங்கு வந்து முருகானந்தம் அம்மாசி என்பவரை வெட்டி விட்டதாகவும் மேற்படி வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட வந்ததாக சொல்லி எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம்

தயார் செய்த அதில் நானும் செல்வராஜும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.